1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Traffic Regulation Work by the Students

* 209. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the expansion of the scheme for the use of students for traffic regulation work in Madras City ?

போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரில் வண்டிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணிக்கு மாணவர்களை முறையாகப் பயன்படுத்தும் திட்டம் எதும் இல்லை.

Subramaniar Temple at Tiruchendur

* 210. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to answer the following question in connection with the answer for the L.C.Q. No. 75 on 31st January 1972—the present stage of the construction of break waters for protecting the Subramaniar Temple at Tiruchendur from sea erosion ?

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோவில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 31—1—1972-ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் வினா எண். 75-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை விரைவாக நடந்து வருகிறது.

Fire Accident in Rameswaram Temple

* 211. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any fire accident took place in Rameswaram Temple;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken by the Government to prevent such fire accidents?

இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், எப்படி ஏற்பட்டது ?

(உ) இத்தகைய தீ விபத்துக்களைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) பொம்மை கடைக்காரர், பொம்மை செய்வதற்காக மெழுகினை உருக்கிடுவதற்கு உபயோகப்படுத்திய விளக்கிலிருந்து தற்செயலாகக் கடை தீப்பிடிக்க, இத் தீ மற்ற கடைகளுக்கும் பரவியது.

(உ) இது சம்பந்தமாக, அரசு ஆணை எண். (நிலை) 2064, வருவாய்த் துறை, நாள் 20—7—1972-ல் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இம்மாதிரியான தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அந்தக் கடைகளெல்லாம் அந்த ஆலயத்திற்கு வெளியே நிர்மாணிக்கப்போகிறார்களா ? அல்லது தொடர்ந்து கோவிலுள்ளேயே வைக்க அனுமதிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி தீ விபத்துக்கள், இராமேஸ்வரம் கோவிலில் ஏற்பட்டதைப் போல மற்ற இடங்களில் ஏற்படக்கூடாது என்று, கோவில் உள்ளே இருக்கும் கடைகளை, வெளியே